24th August 1970]

எடுத்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லியது. அதற்கு அவர்கள் ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். ஆனாலும் இப்போது தென்னாற்காடு மாவட்டத்தில் தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலிக்கும், மதுரைக்கும் இப்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. கே. ராஜாராம் : சிறு குடியானவர் என்றால் என்ன ? எத்தனை ஏக்கர் வைத்திருப்பவர்கள் சிறு குடியானவர்கள் என்று கருதப்படுவார்கள் என்பதற்கு இலக்கணம் ஏதாவது வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசு இதற்கு எந்த இலக்கணமும் கூறவில்லை. நாமாகவே 2 முதல் 3 ஏக்கர் வரை நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களையும் 3 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் வைத்திருப்பவர்களையும் சிறு குடியானவர்கள் என்று அரசாங்கம் கருதலாம் என்று வைத்திருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether by this Scheme tenant-farmers are likely to be helped or it will not apply to tenants at all?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது குறித்த குறிப்பெதுவும் இங்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி கேட்டால் விளக்கமாகச் சொல்லப்படும்.

Harijan Hostels

* 6. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state the numbr of seats, among those reserved for Harijan students, remaining vacant on account of dearth of Harijan students in the different Harijan hostels in Ramanathapuram distric in the year 1968–69?

அரிசன மாணவர் இல்லங்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1968-69-ஆம் ஆண்டில் இராமனாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரிசன மாணவர் இல்லங்களில், அரிசன மாணவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களில், எத்தனை இல்லங்களில் மாணவர்கள் வராத காரணத்தால் எத்தனை இடங்கள் காலியாக இருந்தன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 39 மாணவர் இல்லங்கள்.
449 காலி இடங்கள்.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவரவர்களே, இந்தப் பூர்த்தி செய்யப்படாத காலியிடங்களில் பின்தங்கிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு, அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

[24th August 1970

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாணவர்கள் வருவதை யொட்டித்தான் இந்த இடங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன. காலியாக உள்ள விடுதிகளில் பின்தங்கிய மாணவர்கள் வர நேர்ந்தால், அவர்களும் அனுமதிக்கப் பட்டு வருகிறார்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் ஒரு குறிப் பிட்ட மாணவர் எண்ணிக்கை என்று ஒதுக்கப்படுகிறது. அதாவது, ஒரு இல்லத்தில் 100 மாணவர்களுக்கு இடமிருந்தால், அதில் 70 சதவீதம் ஹரிஜன மாணவர்களுக்கு என ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் 40 மாணவர்கள் தான் இருக்கிறார்கள். அப்படி 70 இடங்களுக்கு 40 மாணவர்கள் மட்டுமே இருந்தால், 30 இடங்கள் காலியாக இருக்கின்றன. அப்படிக் காலியாக இருக்கிற 30 இடங்களில் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்களா? மற்ற மாணவர்களுக்குக் கொடுக்காவிட்டாலும், பள்ளியிறுதி வகுப்பில் பயிலும் மாணவர்களில் மிகவும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களையாவது சேர்க்கலாம் என்பதற்கு அரசாங்க ஆணை இன்னும் வரவில்லை. இதன் காரணமாக இராம நாதபுரம் மாவட்டத்தில் பல இடங்கள் காலியாக இருக்கின்றன. அதைப் பற்றி அரசு விரைவில் முடிவெடுக்குமா என்றுஅறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒரு மாணவர் இல்லத்தில் 100 இடங்கள் இருந்தால், அதில் 75 இடங்கள் ஷெட்யூல் வகுப்பினருக்கு என்றும் 20 இடங்கள் பின்தங்கிய மாணவர்களுக்கு என்றும் இன்னும் 5 சதவீத இடங்கள் முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு என்றும் பிரிக்கப்பட்டி ருக்கிறது. ஆனால் இந்தக் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் அந்தந்த சமுதாய அடிப்படையில் மாணவர்கள் வரவில்லை என்றால், வேறு சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இடம் கொடுக்கலாம். ஆனால் இப்படிச் சேர்ப்பதில் நடைமுறையில் பல சிக்கல்களுக்கு விடுதிக் காப்பாளர்கள் ஆளாக்கப்படு வதால், அவர்கள் சற்றுக் கடுமையாக இருக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு 40 மாணவர்கள் சேர வேண்டிய இடத்தில் 30 மாணவர்கள் தான் வருகி றார்கள் அரிசஜன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக எஞ்சியுள்ள 10 இடங்களில் ஹரிஜனங்களல்லாத மற்ற மிகவும் பின்தங்கிய அல்லது முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் சேர்க்கப்பட்டு விட்டால், அடுத்த ஆண்டு அதிகப்படியாக வருகிற ஹரிஜன மாணவர்களைச் சேர்க்கும்போது, கஷ்டம் ஏற்படுகிறது. ஏற்கெனவே சேர்க்கப்பட்ட மற்ற சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களை வெளியே அனுப்ப அரசாங்கத்தால் முடியவில்லை. அவர்களே கூட போக மறுக்கிறார்கள். இப்படி சிக்கல் ஏற்படுகிறது. எனவே கூடுமான வரை தான் முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களை அந்தக் காலி இடங்களில் சேர்த்துக்கொள்ளுகிறோம். அப்படிச் சேர்க்கும் போதே கூட இந்த ஒரு ஆண்டுக்குத் தான் நீங்கள் இந்த விடுதியில் தங்கிப் படிக்கலாம், அடுத்த ஆண்டு இடமிருந்தால்தான் உங்களுக்குக் கொடுக்கப்படும், இல்லாவிட்டால் நீங்கள் வெளியே போகத் தான் வேண்டும் என்று சொல்லிச் சேர்க்கும் முறையை வைத்துக்கொண்டு தான் அரசாங்கம் செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஹரிஜன மாணவர்களுக்கு 75 ஸ்தானங்கள் என்று ஒதுக்கினாலும், அந்த எண்ணிக்கைக்கு மேலாகவே மாணவர்கள் மனுச் செய்கிறார்கள். ஆனால் அப்படிச் சேர்த்துக்கொள்வதற்கு

ஒரு விதி வைத்திருக்கிறார்கள். பள்ளியிலிருந்து 5 மைலுக்கு அப்பால் அந்த மாணவர்களின் வீடுகள் இருந்தாலொழிய, அவர்களை விடுதியில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று விதியிருக்கிறது. இதன் காரணமாக ஒரு 40 மாண வர்களைத் தான் எடுக்க முடிகிறது. இப்போது கல்வி விஸ்தரிப்பின் காரண மாக, அநேகமாக எந்த ஒரு மாணவனின் வீட்டிலிருந்தும் 5 மைலுக்குள்ளாக உயர் நிலைப் பள்ளியில்லாத கிராமமே இல்லை என்ற நிலை இருக்கிறது, இதன் காரணமாகத் தான் பெரும்பாலான ஹரிஜன மாணவர்கள் விடுதியில் சேர முடியாதிருக்கிறது. எனவே இந்த விதியைச் சற்று தளர்த்தி அரசாங்கம் உத்தரவிட்டால் குறிப்பிட்ட அளவுக்கு ஹரிஜன மாணவர்கள் சேர வசதியாக இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தற்போதைய விதிகளைத் தளர்த்த வேண்டும் என்ற நிலையான கொள்கை அரசாங்கத்திற்கு இல்லை என்றாலும், அவ்வப்போது சேருகிற மாணவர்களின் நிலைமையை ஒட்டித்தான் இந்த விதி தளர்த்தப்பட்டு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

திரு. கே. ராஜாராம்: இந்தச் சபையில் இந்தக் கேள்வி எழும்போதெல் லாம் அமைச்சர் அவர்கள் இப்போது சொன்ன மாதிரியே கூடுமானவரையில் ஹரிஜன மாணவர்கள் குறிப்பிட்ட அளவுக்குச் சேரவில்லையென்றால், அந்த காலி யான இடங்களில் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 2 ஆண்டுகளாக மதுரை ஜில்லாவில் சில ஊர்களில் பல இடங்களைக் காலியாகவே வைத்திருக்கி றார்கள். நாங்கள் எவ்வளவு சொல்லியும் அந்தக் காலியிடங்களில் பிற்போக்கு இனத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. அந்த இடங்களை யெல்லாம் காலியாகவே வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் சொன்னதைப் போல் நிலைமை இருக்கிறது. என்னுடைய எல்லையில் அவருடைய ஊர் இருப்பதால், இரண்டு பக்கத்திலும் எங்களுக்குக் கஷ்டம் நேரிடையாகத் தெரிகிறது. அச்சம்பட்டி என்ற இடத்தில் உள்ள விடுதி யில் ஹரிஜன மாணவர்கள் சேராததால் ஏற்பட்ட 30 காலியிடங்கள் இருக்கின் றன. நான் எவ்வளவோ சொல்லியும்கூட அங்கே உள்ள ஆர்.டி.ஓ. அவர்கள் பின்தங்கிய சமூதாயத்து மாணவர்களைச் சேர்க்க மறுக்கிறார்கள். இங்கே அமைச்சர் அவர்கள் சாதகமான பதிலைச் சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் இது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் எல்லாக் கலெக்டர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி கண்டிப்பாக காலியான இடங்களில் பின்தங்கிய வகுப்பு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உத்தர விடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, விடுதிகளில் ஹரிஜன மாணவர்கள் சேர்ந்தது போக மீதமுள்ள காலியிடங்களில் மிகவும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில் மறுப்பு ஏதுமில்லை. ஆனால் அப்படிச் சேர்த்துக் கொள்ளப்படும் பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் அடுத்த ஆண்டு 10 ஹரிஜன மாணவர்கள், அந்த இடத்திற்கு உரிய வர்கள், வந்து சேரும்போது தாங்கள் வெளியேறச் சம்மதிக்கிறோம் என்று உறுதிமொழி கொடுத்து அதற்குக் கட்டுப்பட்டு எழுதித் தந்தால், அதுபற்றி அரசாங்கம் உடனடியாக ஆலோசித்து ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கடந்த ஆண்டு திருப்பரங்குன்றம் ஹரிஜன மாணவர்கள் இல்லத்தில் 9 ஹரிஜன மாணவர்கள் அல்லாதவர்கள், மிகவும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

திரு. கே. ராஜாராம்: ஆனல் சேர்க்கப்படாமல் பல ஹாஸ்டல்கள் இருக்கின்றன. திருப்பரங்குன்றம் மதுரை ஆர்.டி.ஓ. வைச் சேர்ந்தது. நான் சொல்லுவது உசிலம்பட்டி ஆர்.டி.ஓ. வைச் சேர்ந்தது. அச்சம்பட்டி கிராமத்தில் இன்னும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. நான் எத்தனையோ முறை கேட்டுக் கொண்டும் அங்கே சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்று நடைபெற்ற இந்த விவாதத்தின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

Backward Class Hostels

* 7. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(a) the places in Ramanathpuram district where hostels for Backward Class male students and female students are situated; and

(b) the number of hostels for male students and female students which were newly opened during the year 1969?

பிற்பட்ட வகுப்பினர் மாணவர், மாணவி இல்லங்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த எந்த ஊர்களில் பிற்பட்ட வகுப்பினர் மாணவர், மாணவி இல்லங்கள் உள்ளன?

(இ) 1969-ஆம் ஆண்டில் எத்தனை புதிய மாணவர், மாணவி இல்லங்கள் திறக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர் இல்லம் எதுவும் தற்போது இல்லை. எனினும் 1970-71-இல் அந்த மாவட்டத்தில் கண்டாரமாணிக்கம், வடக்குசமுத்திரம் ஆகிய இரு இடங்களில் மாணவர்களுக்கும், பாகனேரியில் மாணவிகளுக்கும் இல்லங்கள் முதல் முதலாகத் திறக்கத் திட்டமுள்ளது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் வட்டத்தில் மறவர்களுக்கு என்று ஒரு ஹாஸ்டல் இருப்பதாகக் கருதுகிறேன். அந்த ஹாஸ்டல் பிற்பட்டவர்களுக்கு என்று கருதப்படுகிறதா அல்லது அரிஜனங்களுக்கு என்று கருதப்படுகிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதற்கான விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்கிறேன்.